# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.217/2022

Deposition of witness – PW11

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | கதிரேசன் | Caste | : |
| S/o. | : | குருநாதன் | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

Solemnly affirmed on 25.11.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் தற்போது கோனேரிப்பட்டி மின் பகிர்மானத்தில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பிரிவில் உதவி பொறியாளராக பணியாற்றி வருகிறேன். நான் உதவி பொறியாளராக 05.03.2022ல் தேவூர் மின் பகிர்மான அலுவலகத்தில் பணியாற்றி வந்தபோது தேவூர் காவல்நிலைய காவல் அதிகாரி அவர்கள் செட்டிப்பட்டியில் 05.03.2022ம் தேதி மின் தடை ஏதும் இருந்ததா என்று என்னிடம் கேட்டதன் அடிப்படையில் செட்டிப்பட்டியில் ஒயர்மேனாக இருந்த கிருஷ்ணன் என்பவரை

விசாரித்து, அந்த பகுதியில் 5.03.2022 ம் தேதி இரவு 7.00 மணி முதல் 6.3.2022 ம் தேதி காலை 6.00 மணி வரை மின் தடை ஏற்படவில்லை என்று நான் சான்று வழங்கினேன். மேற்படி சான்று என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். மேற்படி சான்று அ.சா.ஆ.4 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

செட்டிப்பட்டியில் எத்தனை தெருவிளக்குகள், எந்தெந்த இடத்தில் உள்ளது, அதில் எத்தனை எரியும் நிலையில் உள்ளது, எத்தனை எரியாத நிலையில் உள்ளது என்று பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. ஒயர்மேனை கேட்டு தெரிந்து கொண்டேன். காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்காக நான் மேற்படி சான்றை கொடுத்துள்ளேன் என்றால் சரி. காவல் ஆய்வாளர் எங்கே எப்போது என்னை விசாரணை செய்தார் என்றால் தேவூர் மின்சார அலுவலகத்தில் வைத்து விசாரித்தார். காவல் ஆய்வாளர் எந்த தேதியில் என்னை விசாரணை செய்தார் என்றால் ஞாபகமில்லை. ஆய்வாளரிடம் நான் மேற்படி சான்றை எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 16.4.2022ல் வழங்கினேன். நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சான்று வழங்கி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.